# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# கணக்குப்பதிவியல்

## மெல்ல கற்கும் மாணவர்களுக்கான கையேடு (2024-2025)

**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.
செல் : 63843 13131

www.Padasalai.Net

**இன்று நான் தலைகுனிந்து படிப்பதெல்லாம்
நாளை நான் தலை நிமிர்ந்து நடப்பதற்காகவே**

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு – கணக்குப்பதிவியல்

## 2 மதிப்பெண் வினாக்கள்

### அலகு – 1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

**1. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?**

- கணக்கேடுகள் இரட்டைப்பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத பதிவேடுகள் முழுமை பெறா பதிவேடுகள் எனப்படும்.
- சிறிய அளவிலான அமைப்புகளுக்கு மட்டும் பொருந்தும்.

**2. இரட்டைப் பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனி வணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.**

1. ரொக்கக் கணக்கு 2. வாடிக்கையாளர் கணக்கு 3. கடனீந்தோர் கணக்கு

### அலகு – 2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

**1. இலாப நோக்கமற்ற அமைப்பின் பொருள் தரவும்?**

இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கமற்ற அமைப்புகள் எனப்படும். (எ.கா.) கல்வி நிறுவனங்கள், நூலகங்கள்

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?**

அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்க செலுத்துல்கள் முதலியன மற்றும் வருவாயின வேறுபாடியின்றி அனைத்தும் பதியப்படும் கணக்காகும்.

**3. உயில்கொடை என்றால் என்ன?**

- ஒரு இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.
- இது ஒரு முதலின வரவாகும்.

**4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்?**

- உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும்.
- இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

**5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகள் நான்கினைத் தரவும்?**

1. ஆயுள் உறுப்பினர் கட்டணம் 2. உயில்கொடை 3. சிறப்பு நிதி 4. பரிசு நிதி

**6. இலாப நோக்கமற்ற அமைப்பின் வருவாயின வரவுகள் நான்கினைத் தரவும்?**

1. சந்தா 2. முதலீடு மீதான வட்டி
3. நிலைவைப்பு மீதான வட்டி 4. பழைய செய்தித்தாள்கள் விற்றது

### அலகு – 3 கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

**1. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.**

கூட்டாண்மை என்பது "எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும். **– இந்திய கூட்டாண்மைச் சட்டம்**

**2. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கிடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

3. **கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?**

***அ) முதல் மீது வட்டி வழங்கும் போது***

| நாள் | விவரம் | பே.ப .எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | முதல் மீது வட்டி க/கு ப<br>கூட்டாளிகள் முதல் (அ) நடப்பு க/கு | | x x x | <br>x x x |

***ஆ) முதல் மீது வட்டி கணக்கினை முடிக்கும் போது***

| நாள் | விவரம் | பே.ப .எ | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | இலாப நட்டப் பகிர்வு க/கு ப<br>முதல் மீது வட்டி க/கு | | x x x | <br>x x x |

## அலகு – 4 கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

1. **நற்பெயர் என்றால் என்ன?**
ஒரு தொழிலுக்கு நன்மையைத் தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும். நற்பெயர் ஒரு புலனாகா நிலைச் சொத்து.
2. **வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?**
நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்று அழைக்கப்படுகிறது.
3. **உயர் இலாபம் என்றால் என்ன?**
உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.
4. **சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன?**
ஒரு தொழில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம் ஆகும்.
5. **கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.**
   - ♣ இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும் போது
   - ♣ புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது
   - ♣ ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும் போது

## அலகு – 5 கூட்டாளி சேர்ப்பு

1. **புதிய கூட்டாளி சேர்க்கையின் போது, பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?**
பகிர்ந்து தரா காப்புகள் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
2. **தியாக விகிதம் என்றால் என்ன?**
   - ♣ தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்ததை புதிய கூட்டாளிக்கு கொடுப்பதாகும்.
   - ♣ தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

## அலகு – 6 கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

1. **கூட்டாளி விலகல் என்றால் என்ன?**

ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால் அது கூட்டாளி விலகல் எனப்படும்.

2. **ஆதாய விகிதம் என்றால் என்ன?**

- ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப் பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.
- ஆதாயப்பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

3. **ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?**

ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும்.

## அலகு – 7 நிறுமக் கணக்குகள்

1. **பங்கு என்றால் என்ன?**

ஒரு நிறுமத்தின் முதல் குறிப்பிட்ட பண மதிப்பிலான பல சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்த அலகுகள் பங்குகள் என அழைக்கப்படுகின்றன.

## அலகு – 8 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

1. **நிதிநிலை அறிக்கைகள் யாவை?**

- ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே நிதிநிலை அறிக்கைகள் ஆகும்.
- 1. வருமான அறிக்கை 2. இருப்பு நிலைக் குறிப்பு

2. **நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.**

1. ஒப்பீட்டு அறிக்கை 2. பொது அளவு அறிக்கைகள் 3. போக்குப் பகுப்பாய்வு
4. நிதி ஓட்டப் பகுப்பாய்வு 5. ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

3. **நடைமுறை முதல் என்றால் என்ன?**

- நடைமுறை முதல் என்பது நடப்பும் பொறுப்புகளை விட அதிகமாக உள்ள சொத்துகளைக் குறிப்பதாகும்.
- நடைமுறை முதல் = நடப்பு சொத்துக்கள் – நடப்பு பொறுப்புகள்

## அலகு – 9 விகிதப் பகுப்பாய்வு

1. **கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?**

இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றையொன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவதாகும்.

2. **விரைவு விகிதம் என்றால் என்ன?**

விரைவு விகிதம் என்பது நீர்மைச் சொத்துகளுக்கும் நடப்புப் பொறுப்புகளுக்கும் உள்ள விகிதாச்சாரமாகும்.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துக்கள்}}{\text{நீர்மைச் பொறுப்புகள்}}$$

3. **புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?**

புற அக பொறுப்புகள் விகிதம் ஒரு வணிக நிறுவனத்தின் நீண்ட கால கடன் தீர்க்கும் திறனை மதிப்பிடுவதற்கு கணக்கிடப்படுகிறது.

ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

புற அக பொறுப்பு விகிதம் = $\frac{\text{நீண்டகாலக் கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$

4. **முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?**

முதலீடு மீதான வருவாய் என்பது வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபத்திற்கும் பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் உள்ள விகிதத்தைக் காட்டுகிறது.

**முதலீடு மீதான வருவாய்** = $\frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட முதல்}} \times 100$

## அலகு - 10 கணினி கணக்கியல் முறை - Tally

1. **தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?**

தானியங்கும் கணக்கியல் முறை என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அனுகுமுறையாகும்.

2. **கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?**

கணக்கியல் அறிக்கை என்பது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளிலிருந்து இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும்.

3. **ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகளை கூறு.**

1. நாளேடு / குறிப்பேடு 2. பேரேடு 3. இருப்பாய்வு
4. இலாப அறிக்கை 5. இருப்புநிலைக்குறிப்பு 6. ரொக்க ஓட்ட அறிக்கை

4. **கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன?**

கணக்கியல் தகவல் அமைப்பு நிதியில் தரவுகளை சேகரித்து அதை செயலாக்கம் பெறச் செய்து பல்வேறு பயனாளிகளுக்கு தகவலாக அளிக்கிறது.

5. **Tally.ERP 9–ல் குழு என்றால் என்ன?**

- 2009 –ம் ஆண்டு Tally Solution, Tallly ERP–9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது.
- Tally –ல் குழு என்பது ஒரே பண்புகளைக் கொண்ட பேரேடுகளின் தொகுப்பாகும்.

## 3 & 5 மதிப்பெண் வினாக்கள்

### அலகு - 1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

1. **முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?**

**i) தன்மை:–**

இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்வதாகும்.

**ii) பராமரிக்கப்படும் கணக்குகள்:–**

ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

**iii) பொருந்தும் தன்மை:–**

சிறு அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை அமைப்புகளுக்கு பொருந்தும்.

2. **முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?**

**i) பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:–**

சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.

**ii) இருப்பாய்வு தயாரிப்பது கடினம்:–**

கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்து கொள்ள இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.

**iii) நிதிநிலையைக் கண்டறிதல் கடினம்:–**

பதிவுகள் முழுமையாக இல்லாத காரணத்தால் வியாபாரத்தின் உண்மையான நிதி நிலையை கண்டறிவது கடினம்.



ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

3. **இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| | தலைப்பு | இரட்டைப்பதிவு முறை | முழுமை பெறா பதிவேடுகள் |
|---|---|---|---|
| 1 | நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | பற்று, வரவு ஆகிய இரு தன்மைகளும் பதியப்படுகின்றன. | நடவடிக்கைகள் முழுமையாகப் பதியப் படுவதில்லை. |
| 2 | இருப்பாய்வு தயாரித்தல் | இருப்பாய்வு தயாரிக்க முடியும். | இருப்பாய்வு தயாரிக்க முடியாது. |
| 3 | நிதி நிலையினைக் கண்டறிதல் | உண்மையான நிதி நிலையை அறிய முடியும். | உண்மையான நிதி நிலையை அறிய முடியாது. |
| 4 | பொருந்தும் தன்மை | அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும். | சிறிய அமைப்புகளுக்கு மட்டும் பொருந்தும். |
| 5 | நம்பகத் தன்மை | நம்பகத் தன்மை உடையது. | நம்பகத் தன்மை அற்றது. |

4. **நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| | அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | வியாபாரத்தின் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது. | வியாபாரத்தின் நிதி நிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. |
| 2 | கணக்கியல் முறை | நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. | இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. |
| 3 | தயாரிப்பின் அடிப்படை | பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. | பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டவை. |
| 4 | நம்பகத்தன்மை | நம்பகத் தன்மை அற்றது. | நம்பகத் தன்மை உடையது. |
| 5 | விடுப்பட்ட விவரங்கள் | விடுப்பட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | விடுப்பட்ட விவரங்களைக் கண்டறிய முடியும். |

5. **முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?**

ப **மொத்தக் கடனாளிகள் க/கு** வ

| | | | |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்கம்) | XXX | ரொக்கம் / வங்கி க/கு | XXX |
| வங்கி க/கு | XXX | அளித்த தள்ளுபடி க/கு | XXX |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு | XXX | விற்பனைத் திருப்பக் க/கு | XXX |
| (மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | XXX | வாராக்கடன் க/கு | XXX |
| விற்பனை க/கு **(கடன் விற்பனை)** | | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது) | XXX |
| | | இருப்பு கீ/இ (இறுதி) | XXX |
| | XXX | | XXX |

## அலகு – 2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

1. **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. இது ஒரு பெயரளவு கணக்காகும்.

2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்?

| | அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது. | உபரி அல்லது பற்றாக்குறை அறிய தயாரிக்கப்படுகிறது. |
| 2 | கணக்கின் தன்மை | இது ஒரு சொத்துக் கணக்காகும். | இது ஒரு பெயரளவு கணக்காகும். |
| 3 | கணக்கியலின் அடிப்படை | ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாக கொண்டது | நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாக கொண்டது |
| 4 | தொடக்க மற்றும் இறுதி இருப்பு | ரொக்கம் மற்றும் வங்கியின் தொடக்க இருப்பு, இறுதி இருப்பு இருக்கும் | உபரி அல்லது பற்றாக்குறை இருக்கும். |
| 5 | காலம் | கடந்த ஆண்டு, நடப்பு ஆண்டு, எதிர் வரும் ஆண்டு நடவடிக்கைகள் மட்டும் இடம் பெறும். | நடப்பு ஆண்டிற்குரிய நடவடிக்கைகள் மட்டும் இடம் பெறும். |

3. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?

அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு:

- ♣ நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா கூட்டவும்.
- ♣ முன்கூட்டிப் பெற்ற சந்தா நடப்பாண்டிற்குரியதை கூட்டவும், முந்தைய எதிர்வரும் ஆண்டுக்குரியதைக் கழிக்கவும்.

ஆ) இருப்புநிலைக்குறிப்பு:

- ♣ நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இருப்புநிலைக் குறிப்பில் சொத்து பக்கம் வரும்.
- ♣ நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்பு பக்கம் வரும்.

4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?

*அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை:*

வருவாய் மற்றும் செலவினக் க/கு – வருமான பக்கம்

*ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்:*

இருப்புநிலைக் குறிப்பு – பொறுப்பு பக்கம்.

*இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி:*

இருப்புநிலைக் குறிப்பு – பொறுப்பு பக்கம்.

## அலகு – 3 கூட்டாண்மை நிறுவனத் கணக்குகள் – அடிப்படைகள்

1. கூட்டாண்மையின் சிறப்பியல்புகள் யாவை?

- ♣ உறுப்பினர்கள் : குறைந்த பட்சம் – 2 பேர், அதிக பட்சம் – 50 பேர்
- ♣ இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்ள கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இருக்க வேண்டும்.


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

♣ நிறுவனத்தை கூட்டாளிகள் அனைவருமோ அல்லது ஒருவரோ நடத்தலாம்.

2. **கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.**

i) அனைத்து கூட்டாளிகளின் பெயர், முகவரி ii) இலாப பகிர்வு விகிதம்

iii) முதல் மீது அனுமதிக்கப்படும் வட்டி வீதம் iv) கூட்டாளியின் எடுப்புகள் மீதான வட்டி வீதம்

v) கூட்டாளிக்கு அனுமதிக்கப்படும் ஊதியம்

3. **நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.**

| | அடிப்படை | நிலை முதல் முறை | மாறுபடும் முதல் முறை |
|---|---|---|---|
| 1 | கணக்குகளின் எண்ணிக்கை | முதல் கணக்கு மற்றும் நடப்பு கணக்கு பராமரிக்கப்படுகிறது. | முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகிறது. |
| 2 | முதல் தொகையில் மாற்றம் | முதல் தொகை மாறாமல் இருக்கும். | முதல் தொகை பருவந்தோறும் மாறும். |
| 3 | முதல் கணக்கு இறுதி இருப்பு | முதல் கணக்கு வரவு இருப்பைக் காட்டும். | முதல் கணக்கு வரவு அல்லது பற்று இருப்பைக் காட்டும். |
| 4 | நடப்பு கணக்கு இறுதி இருப்பு | நடப்புக் கணக்கு பற்று அல்லது வரவு இருப்பைக் காட்டும். | நடப்புக் கணக்கு தயாரிக்கப்படுவதில்லை. |
| 5 | சரிக்கட்டுதல்கள் | அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் செய்யப்படும். | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் செய்யப்படும். |

4. **கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932–ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.**

<u>1. கூட்டாளிகளின் ஊதியம்</u>

எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

<u>2. இலாப பகிர்வு விகிதம்</u>

இலாப நட்டங்களை கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

<u>3. முதல் மீது வட்டி</u>

கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

<u>4. கடன் மீதான வட்டி</u>

கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்

<u>5. எடுப்புகள் மீது வட்டி</u>

கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக் கூடாது.

## அலகு – 4 கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

1. **நற்பெயரை தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்?**

<u>1. நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் :–</u>

நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது. அதிக இலாபம் ஈட்டும் நிறுவனம் அதிக நற்பெயர் மதிப்பினை கொண்டிருக்கும்.

<u>2. நல்ல தரமான பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் :–</u>

நல்ல தரமான பொருட்கள் மற்றும சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருக்கும் நிறுவனத்தின் நற்பெயர் அதிகமாக இருக்கும்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

***3. வியாபார நிறுவனத்தின் கால அளவு :-***

நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்தி வரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால் இந்த நிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.

***4. திறமைமிகு மேலாண்மை :-***

திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம் அதிகமான இலாபம் ஈட்டும் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

***5. போட்டியின் அளவு :-***

போட்டியே இல்லாத (அ) குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

***6. பிற காரணிகள் :-***

உரிமையாளரின் பிரபலம் ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற காரணிகள் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

2. **உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப் படுகிறது?**

- உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
- சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண இலாப விகிதம்
- பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துக்கள் + நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்

## அலகு – 5 கூட்டாளி சேர்ப்பு

1. **கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?**

- பகிர்ந்து தரா இலாபம் , காப்பு, மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்து அளித்தல்
- சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தை நிர்ணயித்தல்
- நற்பெயர் சரிகட்டுதல்

## அலகு – 6 கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

1. **கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.**

- பகிர்ந்து தரா இலாபங்கள் , காப்புகள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளித்தல்
- சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
- புதிய விகிதம் மற்றும் தியாக விகிதம் தீர்மானித்தல்
- நற்பெயர் சரிகட்டுதல்
- விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துதல்.

2. **தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| | அடிப்படை | தியாக விகிதம் | ஆதாய விகிதம் |
|---|---|---|---|
| 1 | பொருள் | புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள் கொடுக்கும் இலாப பங்காகும். | தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியிடமிருந்து பெறும் ஆதாயப் பங்காகும். |
| 2 | நோக்கம் | தியாகம் செய்யும் கூட்டாளிகளின் நற்பெயர் தொகையை சரிகட்டுதல் | ஆதாயம் பெறும் கூட்டாளிகளின் நற்பெயர் தொகையை சரிகட்டுதல் |
| 3 | கணக்கிடும் காலம் | புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படும். | கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படும். |


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 4 | கணக்கிடும் முறை | பழைய இலாப விகிதத்திற்கும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடாகும். | புதிய இலாப விகிதத்திற்கும் பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடாகும். |
| 5 | சூத்திரம் | தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம் | ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம். |

## அலகு – 7 நிறுமக் கணக்குகள்

1. **முன்னுரிமைப் பங்குகளுக்கும். நேர்மைப் பங்குகளுக்கு முள்ள வேறுபாடுகளை கூறவும்.**

| | அடிப்படை | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|---|
| 1 | பொருள் | ஒரு குறிப்பிட்ட சதவீதம் பங்காதாயம் பெறுவதில் முன்னுரிமை. | இதில் பங்காதாயம் பெறுவதில் முன்னுரிமை இல்லை |
| 2 | வாக்குரிமை | வாக்குரிமை கிடையாது | வாக்குரிமை உண்டு |
| 3 | பங்காதாய விகிதம் | பங்காதாய விகிதம் நிலையானது | பங்காதாய விகிதம் நிலையாக இருக்காது |
| 4 | முதல் திரும்ப பெறும் உரிமை | நிறுமக் கலைப்பின் போது முதலை திரும்ப பெறும் முன்னுரிமை உண்டு | நிறுமக் கலைப்பின் போது முதலை திரும்ப பெறும் முன்னுரிமை இல்லை |
| 5 | உரிமை நிலை | இப்பங்குகளை வைத்திருப்பவர் நிறுவனத்தின் உரிமையாளர் இல்லை | இப்பங்குகளை வைத்திருப்பவர் நிறுவனத்தின் உரிமையாளர் |

2. **சிறுகுறிப்பு வரைக.**
**அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) காப்புமுதல்**

**அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்:–**
- அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்டது.
- அதிகபட்சமாக முதலை திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை

**ஆ) காப்பு முதல்:–**
- ஒரு நிறுமம் அதன் கலைப்பின் போது மட்டும் அழைப்பு விடுக்கலாம்.
- அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதியை காப்பு முதல் எனலாம்.

## அலகு – 8 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

1. **ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையுவும்?**
- இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கத்தை வெளிப்படுத்தும்.
- ரொக்கம் என்பது கை ரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது.
- நிறுவனத்தின் நீர்மைத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் கணக்கிட உதவும்.

2. **ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.**

***பத்தி 1 :–*** இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்.

***பத்தி 2 :–*** முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்.

***பத்தி 3 :–*** இரண்டாம் ஆண்டிற்கான தொகையை பதிவு செய்யவும்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

*பத்தி 4 :–* மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்.

*பத்தி 5 :–* கூடும் அல்லது குறையும் சதவீதம் = $\frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$

3. **பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்?**

*பத்தி 1 :–* வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

*பத்தி 2:–* தொகையினை பதிவு செய்யவும்.

பத்தி 3:– பொதுவாக அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். பத்தி 2–ல் உள்ள விவரங்களுக்கு பொதுவாக அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3–ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

## அலகு – 9 விகிதப் பகுப்பாய்வு

1. **இயக்க இலாபம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

***இயக்க இலாபம்*** = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்கவிலை

***இயக்க அடக்க விலை*** = விற்ற பொருளின் அடக்கவிலை + இயக்கச் செலவுகள்

## அலகு – 10 கணினி கணக்கியல் முறை – Tally

1. **கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.**

- நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும்.
- நடவடிக்கைகள் சான்றாவணம் பதிவுகள் மூலமே பதியப்பட வேண்டும்.
- ***சான்றாவண வகைகளைப் பார்வையிட:–***

  Gateway > Master > Accounts Info > Voucher Types > Display

2. **Tally ERP 9–ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?**

- ரொக்கம் மற்றும் இலாப நட்ட க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை TALLY கொண்டுள்ளது.
- மற்ற பேரேடுகளை தேவைக்கேற்ப பயனர் உருவாக்கி கொள்ள வேண்டும்.
- ***பேரேடுகளை உருவாக்க:–***

  Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create

3. **Tally ERP பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.**

i) பெறுதல் சான்றாவணம்
ii) செலுத்தல் சான்றாவணம்
iii) எதிர்ப்பதிவு சான்றாவணம்
iv) கொள்முதல் சான்றாவணம்
v) விற்பனை சான்றாவணம்
vi) உரிய குறிப்பேடு சான்றாவணம்

4. **Tally ERP–9 இலாப நட்டக் கணக்கை எவ்வாறு பார்வையிடு என்பதை விளக்கவும்.**

F10 : A/C Reports > Profit & Loss A/C > Alt F1 (detailed) **(அல்லது)**
Gateway of Tally > Reports > Profit & Loss A/c > Alt F1 (detailed)


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

5. **கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.**

**1. கணக்கேடுகளை பராமரித்தல்:–**

கணினிமையக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.

**2. சம்பளப் பட்டியல் தயாரித்தல்:–**

கணினிமயக் கணக்கியல் முறை பணியாளர்களின் வருகையைப் பதிந்து சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது.

**3. அறிக்கை உருவாக்குதல்:–**

கணினிமையக் கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்க உதவுகிறது

**4. தரவு அனுப்புதல்/பெறுதல்:–**

கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள வேறு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.

**5. வரிவிதிப்பு:–**

கணினிமையக் கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை பிடித்தம் செய்து அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது.

## குறிப்பு:-

**2 மதிப்பெண் வினாக்களுக்கு 2 தலைப்பு மற்றும் விளக்கமும், 3 மதிப்பெண் வினாக்களுக்கு 3 தலைப்பு மற்றும் விளக்கமும், 5 மதிப்பெண் வினாக்களுக்கு 5 தலைப்பு மற்றும் விளக்கம் அளித்தால் போதுமானது.**

ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

# முக்கிய கணக்குகள்

## அலகு – 1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

1. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

**தீர்வு:–**

ப பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 60,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 1,60,000 |
| **கடனாளிகள் க/கு (இருப்பு)** (அவ்வாண்டில் மாற்றுச்சீட்டு பெற்றது) | 2,05,000 | கடனாளிகள் க/கு (பெ.மா.சீ மறுக்கப்பட்டது) | 15,000 |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | 90,000 |
| | 2,65,000 | | 2,65,000 |

ப மொத்தக் கடனாளிகள் கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 2,50,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 7,25,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு (மறுக்கப்பட்டது) | 15,000 | உள் திருப்பக் க/கு | 50,000 |
| **விற்பனை க/கு** (கடன் விற்பனை) **(இருப்பு)** | 9,85,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு (ம பெற்றது) | 2,05,000 |
| | | வாராக்கடன் | 30,000 |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | 2,40,000 |
| | 10,10,000 | | 10,10,000 |

**மொத்த விற்பனை** = ரொக்க விற்பனை + கடன் விற்பனை
= ₹ 3,15,000 + ₹ 9,85,000
= ₹ 13,00,000

2. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 25,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| | | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 | | |

**தீர்வு:–**

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (செலுத்தியது) | 30,000 | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 25,000 |
| இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | 20,000 | **கடனீந்தோர் க/கு (இருப்பு)** (மாற்றுச் சீட்டு ஏற்கப்பட்டது) | **25,000** |
| | 50,000 | | 50,000 |

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (செலுத்தியது) | 1,20,000 | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 30,000 |
| கொள்முதல் திருப்பக் க/கு | 15,000 | **கொள்முதல் க/கு** (கடன் கொள்முதல்) **(இருப்பு)** | **1,55,000** |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது) | 25,000 | | |
| இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | 25,000 | | |
| | 1,85,000 | | 1,85,000 |

**மொத்த கொள்முதல்** = ரொக்க கொள்முதல் + கடன் கொள்முதல்
= ₹ 2,25,000 + ₹ 1,55,000
= ₹ 3,80,000

## அலகு – 2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

1. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| சந்தா பெற்றது : முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | விளையாட்டுப் போட்டி நிதி நிதி வரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | உயில் கொடைப் பெற்றது | 2,000 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| கடன்மீதான வட்டி செலுத்தியது | | | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**தீர்வு:–**

ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | தொகை ₹ | தொகை ₹ | செலுத்தல்கள் | தொகை ₹ |
|---|---|---|---|---|
| **இருப்பு கீ/கொ** | | | **இருப்பு கீ/கொ** | |
| கைரொக்கம் | | 1,000 | வங்கி மேல்வரைப்பற்று | 6,000 |
| **சந்தா பெற்றது:–** | | | கூலி செலுத்தியது | 2,000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீது வட்டி செலுத்தியது | 2,000 |
| நடப்பாண்டு | 9,600 | | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| எதிராண்டு | 400 | 10,500 | நீர் மற்றும் மின்சார கட்டணம் | 700 |
| | | | விளையாட்டு போட்டி செலவுகள் | 2,600 |
| விளையாட்டுப் போட்டி | | | விளையாட்டு பொருள் வாங்கியது | 1,900 |
| நிதி வரவு | | 5,200 | **இருப்பு கீ/இ** | |
| உயில் கொடை | | 2,000 | ரொக்கம் | 300 |
| அரங்க நன்கொடை | | 2,000 | **வங்கி** | **2,400** |
| | | 20,700 | | 20,700 |

(**குறிப்பு:–** செலுத்த வேண்டிய கூலி என்பது ரொக்கம் சாரா நடவடிக்கை. ஆகையால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை.)

2. கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு:– | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில்கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது | 16,000 | இருப்பு கீ/இ :– | |
| (ஏட்டு மதிப்பு ₹ 17,000) | | கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

**தீர்வு: –**

ப வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

| செலவுகள் | தொகை ₹ | வருமானம் | தொகை ₹ |
|---|---|---|---|
| சம்பளம் | 20,000 | வட்டி பெற்றது | 5,000 |
| வாடகை | 24,000 | சந்தா | 55,000 |
| பயணச்செலவுகள் | 2,000 | நுழைவுக் கட்டணம் | 7,000 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 | | |
| அறைகலன் விற்றதால் ஏற்பட்ட நட்டம் | 1,000 | | |
| **உபரி** | **14,000** | | |
| | 67,000 | | 67,000 |


**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேர்ந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**குறிப்பு :–**

அறைகலன் விற்ற விலை – ஏட்டு மதிப்பு (ஏட்டு மதிப்பை விட விற்ற விலை குறைவு எனவே நட்டம்)

= ₹ 16000 – ₹17000 = (–) ₹ 1,000

3. பின்வரும் விவரங்கள் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹ 50,000. இதில் 2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 5,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 7,000 உள்ளடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ₹ 6,000. 2017 ஆம் ஆண்டில் முன் கூட்டிப் பெற்ற 2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 4,000.

**தீர்வு:–**

ப **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு** வ

| செலவுகள் | தொகை ₹ | தொகை ₹ | வருமானம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| | | | 2018 ஆம் ஆண்டு சந்தா | 50,000 | |
| | | | கழிக்க:– 2017 ஆம் ஆண்டு சந்தா | 5,000 | |
| | | | | 45,000 | |
| | | | கழிக்க:– 2019 ஆம் ஆண்டு சந்தா | 7,000 | |
| | | | | 38,000 | |
| | | | கூட்டுக:– 2018 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா | 6,000 | |
| | | | | 44,000 | |
| | | | கூட்டுக:– 2017 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டு சந்தா முன் கூட்டிப் பெற்றது | 4,000 | 48,000 |

## அலகு – 3 கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

1. ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

(i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

(v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

**தீர்வு:–**

நிறுவனத்தில் கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாததால் இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932ன் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பொருந்தும்.

(i) எந்த ஒரு கூட்டாளிக்கும் முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை.
(ii) கூட்டாயின் எடுப்புகளுக்கு வட்டி கணக்கிடக் கூடாது.
(iii) இலாபம் சமமாகப் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்.
(iv) எந்த கூட்டாளிக்கும் ஊதியம் வழங்க தேவையில்லை.
(v) கடன் மீது வட்டி ஆண்டுக்கு 6 % செலுத்தப்பட வேண்டும்.

2. மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3 : 2 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ₹ 1,50,000 மற்றும் ரமேஷ் ₹ 1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ₹ 25,000 மற்றும் ₹ 20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

**தீர்வு:–**

**முதல் மீது வட்டி கணக்கிடல் :–**

முதல் மீது வட்டி = முதல் தொகை X வட்டி வீதம் X வட்டிக்குரிய காலம்

மன்னன் = ₹ 1,50,000 X $\frac{6}{100}$ = ₹ 9,000

ரமேஷ் = ₹ 1,00,000 X $\frac{6}{100}$ = ₹ 6,000

**குறிப்பு** : – முதல் மீது வட்டி கணக்கிடும் போது நடப்பு கணக்கின் இருப்புகளை எடுத்துக் கொள்ளக் கூடாது.

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2018, மார்ச் 31 | முதல் மீது வட்டி க/கு ப<br>மன்னன் நடப்பு க/கு<br>ரமேஷ் நடப்பு க/கு<br>(முதல் மீது வட்டி வழங்கியது) | | 15,000 | <br>9,000<br>6,000 |

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 2018, மார்ச் 31 | இலாப நட்டப் பகிர்வு க/கு ப<br>முதல் மீது வட்டி க/கு<br>(முதல் மீது வட்டி கணக்கை முடிந்தது) | | 15,000 | <br>15,000 |

3. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| பிப்ரவரி 1 | 2,000 |
| மே 1 | 10,000 |
| ஜூலை 1 | 4,000 |
| அக்டோபர் 1 | 6,000 |

எடுப்புகள் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**தீர்வு:–**

எடுப்பு மீது வட்டி = எடுப்புத் தொகை X வட்டி வீதம் X வட்டிக்குரிய காலம்

மார்ச் 1 ஆல் எடுப்பு = $2{,}000 \times \frac{6}{100} \times \frac{11}{12}$ = ₹ 110

மே 1 ஆல் எடுப்பு = $10{,}000 \times \frac{6}{100} \times \frac{8}{12}$ = ₹ 400

ஜீலை 1 ஆல் எடுப்பு = $4{,}000 \times \frac{6}{100} \times \frac{6}{12}$ = ₹ 120

அக்டோபர் 1 ஆல் எடுப்பு = $6{,}000 \times \frac{6}{100} \times \frac{3}{12}$ = ₹ 90

**எடுப்பு மீது வட்டி** ₹ 720

4. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| பிப்ரவரி 1 | 2,000 |
| மே 1 | 10,000 |
| ஜூலை 1 | 4,000 |
| அக்டோபர் 1 | 6,000 |

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

**தீர்வு:–**

| எடுப்பு நாள் | எடுப்பு தொகை ₹ | வட்டிக்குரிய காலம் டிசம்பர் 31 வரை (மாதங்களில்) | பெருக்குத் தொகை ₹ |
|---|---|---|---|
| பிப்ரவரி 1 | 2,000 | 11 | 22,000 |
| மே 1 | 10,000 | 8 | 80,000 |
| ஜீலை 1 | 4,000 | 6 | 24,000 |
| அக்டோபர் 1 | 6,000 | 3 | 18,000 |
| | | மொத்த பெருக்குத் தொகை | 1,44,000 |

எடுப்பு மீது வட்டி = மொத்த பெருக்குத் தொகை X வட்டி வீதம் X $\frac{1}{12}$

= ₹ $1{,}44{,}000 \times \frac{6}{100} \times \frac{1}{12}$

**எடுப்பு மீது வட்டி = ₹ 720**



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

5. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்
(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

**தீர்வு:-**

**(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்**

எடுப்புதொகை X 12 = மொத்த எடுப்பு தொகை X வட்டி வீதம் X $\frac{6.5}{12}$

₹ 2,500 X 12 = ₹ 30,000 X $\frac{4}{100}$ X $\frac{6.5}{12}$

= **₹ 650**

**(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்**

எடுப்புதொகை X 12 = மொத்த எடுப்பு தொகை X வட்டி வீதம் X $\frac{6}{12}$

₹ 2,500 X 12 = ₹ 30,000 X $\frac{4}{100}$ X $\frac{6}{12}$

= **₹ 600**

**(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்**

எடுப்புதொகை X 12 = மொத்த எடுப்பு தொகை X வட்டி வீதம் X $\frac{5.5}{12}$

₹ 2,500 X 12 = ₹ 30,000 X $\frac{4}{100}$ X $\frac{5.5}{12}$

= **₹ 550**

## அலகு - 4 கூட்டாண்மை கணக்குகள் - நற்பெயர்

1. பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | தொகை ₹ |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

**தீர்வு:-**

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$ = $\frac{5,000 + 8,000 - 3,000 + 6,000}{4}$

= $\frac{16,000}{4}$ = **₹ 4,000**

நற்பெயர் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 4,000 X 3 = **₹ 12,000**



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

2. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | இலாபம் ₹ | நிறைகள் |
|---|---|---|
| 2015 | 10,000 | 1 |
| 2016 | 12,000 | 2 |
| 2017 | 16,000 | 3 |
| 2018 | 18,000 | 4 |

**தீர்வு:–**

**கூட்டு சராசரி இலாப முறை கணக்கிடல் :–**

| ஆண்டு | இலாபம் ₹ A | நிறைகள் B | கூட்டு இலாபம் ₹ (A X B) |
|---|---|---|---|
| 2015 | 10,000 | 1 | 10,000 |
| 2016 | 12,000 | 2 | 24,000 |
| 2017 | 16,000 | 3 | 48,000 |
| 2018 | 18,000 | 4 | 72,000 |
| | **மொத்தம்** | 10 | 1,54,000 |

கூட்டு சராசரி இலாபம் $= \frac{\text{கூட்டு இலாபங்களின் மொத்தம்}}{\text{நிறைகளின் மொத்தம்}} = \frac{1,54,000}{10}$ = ₹ 15,400

நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 15,400 X 3 = ₹ **46,200**

3. பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) நிறுவனத்தின் மொத்த சொத்துகள் ₹ 5,00,000

(ஆ) நிறுவனத்தின் பொறுப்புகள் ₹ 2,00,000

(இ) இவ்வகைத் தொழில்களின் சாதாரண இலாப விகிதம் 12.5%

(ஈ) நிறுவனத்தின் சராசரி இலாபம் ₹ 60,000

**தீர்வு:–**

பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் (நற்பெயர் தவிர) + நடப்பு சொத்துகள் – நடப்பு பொறுப்புகள்

= 5,00,000 – 2,00,000 = ₹ **3,00,000**

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண இலாப விகிதம்

$= 3,00,000 \times \frac{12.5}{100}$ = ₹ **37,500**

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 60,000 – 37,500 = ₹ **22,500**



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

நற்பெயர் = உயர் இலாபம் X கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 22,500 X 2 = ₹ 45,000

4. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) சராசரி இலாபம் ₹ 14,000
(ii) சாதாரண இலாபம் ₹ 4,000
(iii) சாதாரண இலாப விகிதம் 15%
(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5
5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1–ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352.

**தீர்வு:–**

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 14,000 – 4,000 = ₹ 10,000

நற்பெயர் = உயர்இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

= 10,000 × 3.352 = ₹ 33,520

5. பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(அ) சாதாரண இலாப விகிதம் 10%
(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ₹ 30,000, ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 45,000.
(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ₹30,000ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.
(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 3,00,000.

**தீர்வு:–**

**சரிகட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்:–**

| விவரம் | 1–ம் ஆண்டு ₹ | 2–ம் ஆண்டு ₹ | 3–ம் ஆண்டு ₹ | 4–ம் ஆண்டு ₹ |
|---|---|---|---|---|
| இலாபம் | 30,000 | 40,000 | 50,000 | 45,000 |
| **கழிக்க :** திரும்பத் திரும்ப நிகழா வருமானம் | 3,000 | – | – | – |
| **சரிகட்டப்பட்ட பின் இலாபம்** | **27,000** | **40,000** | **50,000** | **45,000** |

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$ = $\frac{27,000 + 40,000 + 50,000 + 45,000}{4}$

= $\frac{1,62,000}{4}$ = ₹ 40,500

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் X சாதாரண இலாப விகிதம்

= 3,00,000 X $\frac{10}{100}$ = ₹ 30,000


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 40,500 – 30,000 = ₹ 10,500

நற்பெயர் = $\frac{\text{உயர் இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}}$ X 100 = $\frac{10,500}{10}$ X 100 = ₹ 1,05,000

## அலகு – 8 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

1. பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2016 – 17<br>₹ | 2017 –18<br>₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

**தீர்வு: –**

**பரணி நிறுமத்தின் 2017 மார்ச் மற்றும் 2018 மாரச் 31ம்நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு வருமான அறிக்கை**

| விவரம் | 2016–17 | 2017–18 | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | % |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 | + 15,000 | + 50 |
| **கூட்டுக:–** இதர வருமானங்கள் | 4,000 | 6,000 | + 2,000 | + 50 |
| மொத்த வருமானம் | 34,000 | 51,000 | + 17,000 | + 50 |
| **கழிக்க:–** செலவுகள் | 10,000 | 15,000 | + 5,000 | + 50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 24,000 | 36,000 | + 12,000 | + 50 |
| **கழிக்க:–** வருமான வரி | 7,200 | 10,800 | + 3,600 | + 50 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | 16,800 | 25,200 | + 8,400 | + 50 |

**குறிப்பு:–**

= $\frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}}$ X 100

**1. விற்பனையின் மூலம் பெற்ற வருவாயின் கூடுதல் மற்றும் குறைதல் சதவீதம்:–**

= $\frac{15,000}{30,000}$ X 100 = **50%**

**2. இதர வருமானத்தின் கூடுதல் மற்றும் குறைதல் சதவீதம்:–**

= $\frac{2,000}{4,000}$ X 100 = **50%**

**3. செலவுகளின் கூடுதல் மற்றும் குறைதல் சதவீதம்:–**

= $\frac{5,000}{10,000}$ X 100 = **50%**

**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

4. **வருமானவரியின் கூடுதல் மற்றும் குறைதல் சதவீதம்:–**

$$= \frac{3,600}{7,200} \times 100 = 50\%$$

2. முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2017, மார்ச் 31 ₹ | 2018, மார்ச் 31 ₹ |
|---|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| **II. சொத்துக்கள்** | | |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,25,000 | 87,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |

**தீர்வு:–**

**முத்து நிறுமத்தின்**

**2017 மார்ச் 31, 2018 மார்ச் 31ம் நாளைய ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பு**

| விவரம் | 2017 – 18 | 2018 – 19 | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | % |
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| பங்குதாரர் நிதி | | | | |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 4,00,000 | 4,40,000 | + 40,000 | + 10 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 | + 15,000 | + 10 |
| மொத்தம் | 75,000 | 82,500 | + 7,500 | + 10 |
| **II. சொத்துக்கள்** | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 5,00,000 | 6,00,000 | + 1,00,000 | + 20 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,25,000 | 87,500 | - 37,500 | – 30 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |

3. சாம் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015 –16 ₹ | 2016 – 17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இதர வருமானம் | 80,000 | 50,000 |
| செலவுகள் | 2,40,000 | 2,50,000 |
| வருமான வரி | 30% | 30% |

**தீர்வு:–**

**சாம் நிறுமத்தின் 2016 மார்ச் மற்றும் 2017 மாரச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கை**

| விவரம் | 2015 – 16 | | 2016 – 17 | |
|---|---|---|---|---|
| | தொகை ₹ | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் | தொகை ₹ | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் |
| விற்பனைமூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 100 | 5,00,000 | 100 |
| கூட்டுக: – இதர வருமானங்கள் | 80,000 | 20 | 50,000 | 10 |
| மொத்த வருமானம் | 4,80,000 | 120 | 5,50,000 | 110 |
| கழிக்க: – செலவுகள் | 2,40,000 | 60 | 2,50,000 | 50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 2,40,000 | 60 | 3,00,000 | 60 |
| கழிக்க: – வருமான வரி | 72,000 | 18 | 90,000 | 18 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | 1,68,000 | 42 | 2,10,000 | 42 |

குறிப்பு:–

| விவரம் | 2015–16 | 2016–17 |
|---|---|---|
| **வருமான வரி கணக்கிடுதல்:–** வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | $2,40,000 \times \frac{30}{100} = ₹\ 72,000$ | $3,00,000 \times \frac{30}{100} = ₹\ 90,000$ |

| விவரம் | 2015–16 | 2016–17 |
|---|---|---|
| இதர வருமானத்தின் சதவீதம் | $= \frac{80,000}{4,00,000} \times 100 = 20\%$ | $= \frac{50,000}{5,00,000} \times 100 = 10\%$ |
| மொத்த வருவாயின் சதவீதம் | $= \frac{4,80,000}{4,00,000} \times 100 = 120\%$ | $= \frac{5,50,000}{5,00,000} \times 100 = 110\%$ |
| செலவுகளின் சதவீதம் | $= \frac{2,40,000}{4,00,000} \times 100 = 60\%$ | $= \frac{2,50,000}{5,00,000} \times 100 = 50\%$ |
| வரிக்கு முன் உள்ள இலாபத்தின் சதவீதம் | $= \frac{2,40,000}{4,00,000} \times 100 = 60\%$ | $= \frac{3,00,000}{5,00,000} \times 100 = 60\%$ |
| வருமான வரியின் சதவீதம் | $= \frac{72,000}{4,00,000} \times 100 = 18\%$ | $= \frac{90,000}{5,00,000} \times 100 = 18\%$ |
| வரிக்கு பின்னர் இலாபத்தின் உள்ள சதவீதம் | $= \frac{1,68,000}{4,00,000} \times 100 = 42\%$ | $= \frac{2,10,000}{5,00,000} \times 100 = 42\%$ |

4. ராணி நிறுமத்தின்பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச் 31 | 2017, மார்ச் 31 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II. சொத்துக்கள் | | |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,80,000 | 2,00,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |

**தீர்வு:–**

**ராணி வரையறு நிறுமத்தின்**
**2016 மாரச் 31, 2017 மாரச் 31 ம் நாளுக்குரிய பொதுஅளவு இருப்புநிலைக்குறிப்பு**

| விவரம் | 2016 தொகை | மொத்த சொத்துகளில் சதவீதம் | 2017 தொகை | மொத்த சொத்துகளில் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | ₹ |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 60 | 6,00,000 | 60 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 2,70,000 | 30 | 2,50,000 | 25 |
| நடப்புப் பொறுப்புகள் | 90,000 | 10 | 1,50,000 | 15 |
| மொத்தம் | 9,00,000 | 100 | 10,00,000 | 100 |
| II. சொத்துக்கள் | | | | |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 7,20,000 | 80 | 8,00,000 | 80 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,80,000 | 20 | 2,00,000 | 20 |
| மொத்தம் | 9,00,000 | 100 | 10,00,000 | 100 |

**குறிப்பு:–**

| விவரம் | 2015–16 | 2016–17 |
|---|---|---|
| பங்குதாரர் நிதியின் சதவீதம் | $= \frac{5,40,000}{9,00,000} \times 100 = 60\%$ | $= \frac{6,00,000}{10,00,000} \times 100 = 60\%$ |
| நீண்டகால பொறுப்புகளின் சதவீதம் | $= \frac{2,70,000}{9,00,000} \times 100 = 30\%$ | $= \frac{2,50,000}{10,00,000} \times 100 = 25\%$ |
| நடப்பு பொறுப்புகளின் சதவீதம் | $= \frac{90,000}{9,00,000} \times 100 = 10\%$ | $= \frac{1,50,000}{10,00,000} \times 100 = 15\%$ |
| நீண்டகால சொத்துகளின் சதவீதம் | $= \frac{7,20,000}{9,00,000} \times 100 = 80\%$ | $= \frac{8,00,000}{10,00,000} \times 100 = 80\%$ |
| நடப்பு சொத்துகளின் சதவீதம் | $= \frac{1,80,000}{9,00,000} \times 100 = 20\%$ | $= \frac{2,00,000}{10,00,000} \times 100 = 20\%$ |


ச.செல்வகுமார், M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## அலகு – 7 நிறுமக் கணக்குகள்

1. **தாய் நிறுமம் ரூ10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப்பங்குகளை வெளியீடு செய்தது.விண்ணப்பத்தின் போது ரூ 5, ஒதுக்கீட்டின் போது ரூ 2, முதலாம் அழைப்பின் போது ரூ 2 மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ 1 செலுத்தவேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பபப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.**

**தீர்வு:**

| நாள் | விவரம் | பே. ப.எ | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்பம் க/கு<br>(விண்ணப்பத்தொகை பெற்றது) | | 5,00,000 | 5,00,000 |
| | பங்கு விண்ணப்பம் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(விண்ணப்ப தொகை பங்கு முதல் கணக்கிற்க்கு மாற்றியது) | | 5,00,000 | 5,00,000 |
| | பங்கு ஒதுக்கீடு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற வேண்டியது) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீடு க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற்றது) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு இறுதி அழைப்பு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு இறுதி அழைப்பு தொகை பெற்றது) | | 1,00,000 | 1,00,000 |

2. **சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப்பங்குகளை, பங்கு ஒன்று ரூ 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ 3, ஒதுக்கீட்டின் போது ரூ 4, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ 3 செலுத்தப்படவேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பபப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாக பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.**

**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

**தீர்வு:**

| நாள் | விவரம் | பே. ப.எ | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்பம் க/கு<br>(விண்ணப்பத்தொகை பெற்றது) | | 72,000 | 72,000 |
| | பங்கு விண்ணப்பம் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(விண்ணப்ப தொகை பங்கு முதல் கணக்கிற்க்கு மாற்றியது) | | 72,000 | 72,000 |
| | பங்கு ஒதுக்கீடு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற வேண்டியது) | | 96,000 | 96,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீடு க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற்றது) | | 96,000 | 96,000 |
| | பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(முதலாம் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது) | | 72,000 | 72,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு<br>(முதலாம் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது) | | 72,000 | 72,000 |

**3. பாரத் நிறுமம் ரூ 10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:**

**விண்ணப்பத்தின் போது பங்கொன்றிற்கு ரூ 5**

**ஒதுக்கீட்டின் போது பங்கொன்றிற்கு ரூ 3**

**முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது பங்கொன்றிற்கு ரூ 2**

**1,20,000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்பத் தொகை உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.**

**தீர்வு:**

| நாள் | விவரம் | பே. ப.எ | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்பம் க/கு<br>(விண்ணப்பத்தொகை பெற்றது) | | 6,00,000 | 6,00,000 |
| | பங்கு விண்ணப்பம் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(விண்ணப்ப தொகை பங்கு முதல் கணக்கிற்க்கு மாற்றியது) | | 5,00,000 | 5,00,000 |

**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு விண்ணப்பம் க/கு ப<br>வங்கி க/கு<br>(மிகுதியான விண்ணப்பத்தொகை திருப்பி செலுத்தியது) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு ஒதுக்கீடு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற வேண்டியது) | | 3,00,000 | 3,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீடு க/கு<br>(ஒதுக்கீடு தொகை பெற்றது) | | 3,00,000 | 3,00,000 |
| | பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது) | | 2,00,000 | 2,00,000 |

**ச.செல்வகுமார்,** M.Com., B.Ed., M.Phil.,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, சேந்தமங்கலம்.

www.Padasalai.Net



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com